# பாரதியும் பெண் விடுதலையும்

*முனைவர் பா. சிவானந்தவல்லி*

ஆணும் பெண்ணும் சமூகத்தின் இரு பக்கங்களாக இருந்தபோதும் ஆரம்பம் முதலே பெண்களின் நிலை ஆண்களின் நிலைக்கு கீழாகவே இருந்தன. ஆனால் சங்ககாலத்தில் ஓரளவு மேலோங்கி இருந்த பெண்களின் நிலை இடைக் காலத்தில் உரிமையும் விடுதலையும் மறுக்கப்பட்டு சமூக அடிமைகளாக கருதப்பட்டது. கி.பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயரின் மேலோக்கத்தால் சமூகச்சீர்திருத்த சிந்தனையாளர்கள் பலா் குறிப்பிடத்தக்கவர்கள். அதில் ராஜராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, மகாகோவிந்த ரானடே, ராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராமலிங்க அடிகள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் அடியொற்றி இவர்களால் தாக்கம் ஏற்படுத்தப் பட்டவர்களில் சுப்பிரமணிய பாரதியார் முக்கியமானவர். புாரதி வாழ்ந்த காலம் பெண் விடுதலைக்கருத்துக்கள் உலகமெங்கும் துளிர்க்கத் தொடங்கியிருந்தகாலம். இவா் தன் எழுத்துக்கள் மூலம் மக்களிடையே தேசிய மற்றும் சமூக சீர்திருத்த தேசிய இயக்கமும், பெண் முன்னேற்றத்தை தன் கொள்கையாக மாற்றி அதனை வலியுறுத்தியதும் பாரதியின் பெண் விடுதலைபற்றிய சிந்தனையை கூராக்கியது.

பெண் விடுதலைப்பற்றி ஆரம்பம் முதல் தன் பல்வேறு இன்னல்களுக்கிடையே பேசியவர் பாரதியார். அனைவரையும் போல் பேசுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் அதனை தன் வாழ்வில், தன் குடும்பத்தில் செயல்படுத்தியது பாரதியின் தனிச்சிறப்பாகும். காசியில் இருந்த சாக்த மதமும், மாயூரம் வேதநாயம் பிள்ளையின் எழுத்துக்களும், நிவேதிதா தேவியின் சந்திப்பும் பெண்கள் விடுதலை அடையவேண்டும் என்ற எண்ணத்தை பாரதிக்கு ஏற்படுத்தியது. பாரதி காசியில் படித்ததனால் இயற்கையாகவே அவருக்கு வங்காளத்தின் மீது ஒரு பற்று இருந்தது.[2] மேலும் கல்வியில் சிறந்து விளங்கிய வங்காள உயர்குழ பெண்களைக்கண்ட பாரதி பெண்விடுதலைக்குக் கல்வித்தகுதி அவசியம் என்று தன்னுடைய படைப்புகளில் வலியுறுத்தத் தொடங்கினார்.[3]

பெண்ணுரிமை பாரதியத்தின் உயிர் நாடியாகும். இவ்வுரிமை பாரதியார் பல்வேறு கோணங்களில் பேசுகிறார். மக்கள் சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் இரு கண்களையொத்தவா் என்பது இவரின் கருத்தாகும். சமுதாயத்தில் பாதிப்பேரை கல்வியறிவின்றி வைத்திருந்தால் ஏனைய பாதியும் இருளில் மூழ்கி விடும் என்பது பாரதியின் நம்பிக்கையாகும்.

பெண்களின் அறியாமையைப் போக்குவதற்கு இருக்கும் அனைத்து வழிகளையும் பாரதி பின்பற்றினார். முற்காலப் பெண்கள் இராமாயணம் முதலியவற்றிலுள்ள பாடல்களை முற்கால பெண்களைப்போல் தற்போது உள்ள பெண்களும் படித்து முன்னேற வேண்டுமெனவும், வேதத்தில் குழந்தைமணம், கைம்மை நோன்பு, சதி போன்றவற்றிற்கு ஆதாரமில்லை எனக்கூறினார். புாரதியின் வடமொழி அறிவு அவரின் பெண்ணியக் கருத்துக்களுக்கு உதவியாக இருந்தது.

பெண்களுக்குச் சுயாதீனம ஏற்படுத்த வேண்டுமென்றால் அவா்களின் தற்போதைய கற்பு, அடக்கம், ஒழுக்கம் ஆகியவற்றை விடவேண்டும் என்பது அா்த்தமில்லை எனவும், தேசபக்தி, சுயாதீனம், அஞ்சாமை ஆகியவற்றை பயிற்றுவிக்க வேண்டும் என பாரதி உரைக்கின்றார். நம் மாநாடு சீா்பட வேண்டுமென்றால் அவர்களுக்கு, முதலில் பெண்களுக்க அவர்களின் பெருமையை எடுத்துக் கூறி உணரச்செய்ய வேண்டுனக்கூறுவதன் மூலம் பெண்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படுத்துகிறார்.[1] அப்போது தான் அடிமை எண்ணமுடைய, கோடைப்பிள்ளைகள் பிறக்காது என்றும், தாய் அழமையாக இருந்தால் அடிமைப் பிள்ளைகள்தான் பிறக்கும எனக்கூறுவதன் மூலம் பெண்ணடிமை தீர வழி கூறுவதோடு நாம் விடுதலை அடைய அடிப்படையைச் சரி செய்ய வேண்டுமென்று வழி கூறுகின்றார். பெண்கள் விடுதலையடைய பெண்களுக்கு போராடும மனஉறுதியும், நம்பிக்கையும். சுயாதீனமும் வேண்டுமெனக் கூறும் பாரதியார். அதனை பெண்கள் அடைய எவ்வகையில் செயல்பட வேண்டும். யாரைப் பின்பற்ற வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றார். பேண்கள் விடுதலை அடைய பெண் தொழிற் சுதந்திரம், சொத்துரிமை, திருமண உரிமை, விதவை மறுமண எரிமை, மணவிலக்கு ஆகியவை சட்டரீதியாக பெறப்பட வேண்டும். தேவாசிமுறை, சதி ஒழிக்கப்பட வேண்டும் எனவும் தன் படைப்புக்கள் மூலம் வலியுறுத்தினார்.

**பெண் விடுதலை**

பாரதியார் ‘மிளகாய் பழச்சாமியார்’ என்ற கதையில மிளகாய்ப்பழச் சாமியார் என அழைக்கப்பட்ட ஒரு பெண் துறவி, பெண் விடுதலை இயக்கத்தைத் தலைமை யேற்று நடத்த தன்னைத் தேர்ந்தெடுத்ததைக் குறிப்பிட்டு, பெண்களின் நிலையையும் தற்போது உலகில் நிகழ்ந்துவரும் மாற்றங்களையும் கூறுவதாக அமைந்துள்ளதன் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றார். ஆதில் பறையனுக்குப் பார்ப்பானும், கறுப்பு மனிதனுக்கு வெள்ளை மனிதனும் நியாயாம செய்வதைக்காட்டிலும் பெண்ணுக்கு, ஆண் நியாயம் செய்வத முக்கியம் எனத் தன்னிடம் கூறுவதாகக் குறிப்பிடுகிறார். ஏனெனில் நம் மக்கள் சாதாரணமான ஒருவர் அறிவுரை கூறினால் கேட்பதை விட ஒரு சாமியார் சொன்னால், சீடராக இருந்தால் மிகவும் மதிப்பார்கள் என்பதற்காகவும், இவ்வாறு ஓர் உத்தியைக் கையாளுகின்றார்.[4]

‘பெண் விடுதலை’ என்ற கட்டுரையிலட, பாரதியார் பிறநாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்துள்ளது என்பதைக் கூறுவதன் மூலம் பெண்கள் முன்னேற ஆரம்பித்துள்ளதையம், அதில் தேவவல்லிக்கு அவர் கணவன் கொடுத்துள்ள சுதந்திரத்தைக் குறிப்பிட்டுள்ளதன் மூலம் பெண்ணுக்கு ஆண் சுதந்திரம் தர ஆரம்பித்ததை ஓர் நல்குறியீடாக காண்கின்றார். பெண்கள் ஆண்களை விடத் திறமைசாலிகள் என்றும் காங்கிரஸ் கட்சி இங்கிலாந்திற்கு பேச்சுவார்த்தைக்காக பெண்களை அழைத்துச்சென்றால் சுதந்திரம் உடனே கிடைக்கும் என பெண்களின் வலிமையை ஆண்களே கூறுவதாக அமைத்துள்ளதன் மூலம் பெண்களுக்கு விடுதலை தரவேண்டியதன் அவசியத்தை வேதவல்லியம்மை மூலம் வலியுறுத்தியுள்ளார்.[5]

காலம்காலமாக அடிமைப்பட்டு வாழும் பெண்களை அடிமைநிலையிலிருந்து கல்வி மூலம் மீட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆண்களுக்கு இணையான மதிப்பினைப பெற்றுத்தருவதே ‘பெண்விடுதலை’ என பாரதி கூறுகின்றார்.[6] ‘மாதர்களின் சுதந்திரங்கள்’ என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் பெண்களுக்குச் சுதந்திரம் யாரும் தரமாட்டார்கள் அவர்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்றால் அவர்களே எடுத்துக் கொள்ள வேண்டுமென்கிறார்.[7]

மக்களிடையே ஒற்றுமையுண்வை ஏற்படுத்தவும், கோயிலிலுள்ள சிலைகள் மூலம் ஆண், பெண் சமமென்ற எண்ணத்ததை ஏற்படுத்தவும் தான் இந்தியாவில் கோயில்களை நம்மவர்கள் ஏற்படுத்தினார். ஆனால் பூசாரிகளின் தவறான அணுகுமுறையால் அம்முறை சீர்கேடடைந்து நாட்டில் ஆணாதிக்கம் ஏற்பட்டதென்றும், அந்நிலை மாறினால் நாடு முன்னேறும் என்றும் கூறுகின்றார். புாரதி, நம் நாட்டின் பண்டிகை நடக்கும் போதும் அதனை மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படத்தும் வகையில் பயன்படுத்தினார். உலகில் பல நாடுகளில் ஏற்பட்ட பெண்களின் எழுச்சியைக் கண்ட பாரதியார் நம் நாடும் அவ்வாறு வளர்ச்சியடைய வேண்டுமென எண்ணினார். பெண்கள் பழமையிலிருந்து மீண்டு, கட்டுப்பாடுகளை மீறி வீட்டை விட்டு வெளியில் வந்து அரசியல், சமூகப்பணியில் ஈடுபட வேண்டிய சூழலில் நாடு இருந்தால் தான் நாடு முன்னுேறும் என எண்ணினார். அத்தகைய புதுமைப் பெண்களைளே தம் எழுத்துக்களின் மூலம் உருவாக்கினார்.

பெண்களுக்கு அநீதி செய்பவர்கள் அந்நியர்களல்ல நம் வீட்டுமனிதர்கள்தான். எனவே பெண்கள் விடுதலையடைய காந்தியடிகள் கூறும் சாத்வீக எதிர்ப்பு முறையையே நாம் பின்பற்ற வேண்டும் என் பாரதியார் வலியுறுத்துகிறார். எனவே இதனை இந்தியப் பெண்களின் கொள்கைப் பிரகடனம் எனக் கூறலாம்[9] பாரதி பெண்விடுதலைக்காக தர்மயுத்தம் நடத்த வேண்டுமென்று தன்னடைய ‘தமிழ்நாட்டின் விழிப்பு’ என்னும் கட்டுரையில் பெண்களுக்கு அழைப்பு விடுத்தார். பாரதி புதுச்சேரியில் பல்வேறு இன்னல்களை அனுபவித்த போதும், பெண்விடுதலை பற்றித் தொடர்ந்து பேசி வந்தார். ‘‘பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் இன்னல்களை அனுபவித்த போதும், பெண்விடுதலை பற்றித் தொடர்ந்து பேசி வந்தார். ‘‘பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது?’’ என்ற கட்டுரையை எழுதி பெண்கள் கூட்டத்தில் தன் மகளைக்கொண்டே படிக்க வைத்தார்.[10] பெண்விடுதலை இயக்கத்திற்கு வீர உணர்ச்சியுடைய பெண்கள் வீர உணர்வுடைய மக்களைப் பெற்றுத் தரவேண்டும் என்பதனை ‘வீரத்தாய்மார்கள்’ ‘பழங்காலத் தமிழ்மாது’ஆகிய கட்டுரைகளில் கூறியுள்ளார்.

‘‘தேசியக்கல்வி’’ என்கிற கட்டுரையில் இந்து ஸ்திரிகள் சர்வகலா ஆட்சி மண்டலத்தில் சேர்க்கப்பட்டு இருப்பது போதாது. தேசியக்கல்வியில் தமிழ்நாட்டு கிளையென ஒரு கிளை ஏற்படுத்தி பெண்களை அதில் பாதி அளவில் சேர்த்துக் கொண்டு அவர்களுடைய யோசனையையும் கேட்டு நடத்தும் கல்வியே, சுதேசியம், என குறிப்பிடுவது நோக்கத்தக்கது.[11]

பாரதியார் ‘விடுதலைமுத்தம்மா கதை’யில் வேணுமுதலியார் பெண் விடுதலைக் கட்சியை ஆரம்பித்தார் என்பதைச் சுட்டிக்காட்டி அதில் பெண்களைச் சேர்க்க வீட்டிலுள்ள ஆண்கள் ஒப்புக்கொண்டதையும் பெண்கள் தான், பெண்கள் விடுதலையடையத் தடையாக இருப்பதையும் சுட்டிக்காட்டி முதலில் திருத்த வேண்டியது பெண்கள்தான் எனக் கூறுகின்றார். மேலும் முத்தம்மா முழு விடுதலையுடன் எப்படிச் செயல்படுகின்றாள் என்பதையும் எடுத்துக்கூறுவதன் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றார்.[12]

பாரதியார் ஒட்டுமொத்தமாக பெண்களின் சுதந்திரம் பற்றிப் பேசினாலும் எந்த ஒரு சமுதாயத்தில் முறையற்ற பழக்கம் நிலவினாலும், தன் படைப்புகள் மூலம் அதனை மாற்றும் முயற்சியில் ஈடுபடுவார். எடுத்துக்காட்டாக ‘மலையாளத்துக் கதை’யில் நாயர் பெண்களின் முண்டு கொடுக்கம் வழக்கத்தை மாற்ற வேண்டுமென வலியுறுத்தினார். அத்துடன் முண்டு கொடுக்கும் வழக்கத்தை மாற்றிச் செயல்பட்டதையும் அக்கதையில் பாராட்டியுள்ளார்.[13]

தென்னாப்பிரிக்காவில், பெண்கள் விடுதலைச்சங்கம் அதன் செயல்பாடுகள், பணி, சாதனைகள் ஆகியவை எவ்வாறு பெண்களின் நிலையை உயர்த்துகின்றன என்பதைக் குறிப்பிட்டு அதே நேரத்தில் இந்தியாவில் இந்நிலை ஏற்படவில்லையென்று வருந்துவதன் மூலம் பெண்கள், பெண் முன்னேற்ற முயற்சிகயைத் துவங்க வேண்டியதன் அவசியத்தை பாரதியார் குறிப்பிடுகிறார்.[14]

1904 – ஆம் ஆண்டில் நடைபெற்ற பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் தான் மகாகோவிந்த ரானடேயின் மனைவி பண்டிதை ராமபாய் என்பவர் மாதர்களுக்கென்று ஒரு சங்கம் தேவை என்பதற்காக ஆரம்பித்தார். இவர் வழியில் மாதர்கள் தொடர்ந்து காங்கிரஸ் சபைசுடும் போது தங்கள் நிலைமை முன்னேற்றம் ஆகியவை பற்றிப் பேசினர்.[15] சங்கத்தின் கூட்டத்தில் பெண் முன்னேற்ற உபாயங்களைப் பற்றிப் பேசியதற்கு ஆதரவு தெரிவித்து அதன் மூலம் ஆண்களும் இந்த மாநாடு உண்மையான பெண் முன்னேற்றத்தை அளிக்கப் பாடுபட வேண்டும் என்கின்றார். கார்வே என்ற பெண்மணி பெண்கள் சர்வகலாசங்கத்தினை சுதேசப்பள்ளிக்கூடமாக ஆரம்பித்ததற்காகவும் பாராட்டுகிறார்.[16]

‘பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் முக்கியமான ஆரம்பப்படிகள் என்ற தலைப்பில் பாரதியார் 10 கொள்கைகளை ‘பெண் விடுதலை’ என்ற கட்டுரையில் வரைறறுத்து எழுதியுள்ளார்.[17] இவை 19ஆம் நூற்றாண்டின் எந்தச்சமூகச்சீர்திருத்தவாதியும் சிந்தித்துப் பார்க்க முடியாது அளவுக்குத் தீவிரமான சீர்திருத்தக் கருத்துகள். பாரதியின் இந்த பத்து அம்சத்திட்டம் அவர் காலத்தில் மிகவும் புதுமையானது.

**பெண்தொழிற்சுதந்திரம்**

பெண்கள் தொழில் செய்வது குறித்தும் பாரதிக்கு தெளிவான கருத்து இருந்தத. பெண்கள் அவரவர் விருப்புக்கும், திறமைக்கும் ஏற்ப எத்தகைய தொழிகளிலும் ஈடுபடலாம் என்பது அவர் கருத்து.[15] பெண் விடுதலைக்கான ஆரம்பப்படிகளாக அவர் குறிப்பிடும் விதிகளிலே இது தெளிவாகத் தெரிகிறது. வளர்க்கப்பட வேண்டியதும் ஆகும். பாரதி பெண்கள் அரசியலில் பங்கெடுக்கவும், பதவிகள் வகிக்கவும் வேண்டுமெனக் கூறினார். இன்றைய நிலையில் இது முக்கிய கருத்தாகிறது. வளர்ச்சி பெற்ற நாடுகளில் கூட இக்கருத்து சிறுபான்மையாகவே காணப்படுகிறது.

**பெண் சொத்துரிமை**

பெண்களுக்கு பிதுரார்ஜித சொத்தில் உரிமை இருக்க வேண்டும் என பாரதி கூறியது. முக்கியமானதாகும். அக்காலகட்டத்தில் பெண் சொத்துரிமையின்மை பெண்ணடிமைத்தனத்தின் மூலவேர்களில் ஒன்றாக அமைந்தது. பாரதியார் பெண்களுக்குச் சொத்துரிமை தரவேண்டும் என்பதைக் கூறுவதுடன் தானும் அதையே பின்பற்றினார். விடுதலையடைந்தால் சொத்துரிமை விடுமென்பதை அவர் இறந்துபோன கணவனின் சொத்து அப்பெண்ணின் சொத்தாக மதிக்கப்பட வேண்டுமென ‘பெண்’ என்ற கட்டுரையில் கூறுகிறார்.

**பெண் திருமணம்**

பாரதியார், திருமண் என்பது இருதனிநபர்களின் சுதந்திரச் சேர்க்கையாக இருக்க வேண்டுமெனவும் அதனைப் பின்பற்றுமாறும் மக்களை அறிவுறுத்துகின்றார். ருஷ்யாவின் விவாகவிதியின் மூலம் கவரப்பட்ட பாரதி இந்தியாவில் காணப்படும் விவாகக்கண்ணோட்டம் மாறவேண்டுமெனவும் கூறுகிறார். எனவே தான் சிறு வயதுத் திருமணம், பலதாரமணம் ஆகியவற்றை நீக்கி மறுமணஉரிமை, திருமணத்தில் பெண்ணின் விருப்பம், விவாகரத்து உரிமை ஆகியவற்றைப் பற்றி பெண்கள் விடுதலைக்கான ‘‘ஆரம்பப்படிகள்’’ என்ற கட்டுரையில் வலியுறுத்தினார்.

**விதவை மறுமணம்**

இந்தியப் பெண்ணியம், தேசியஇயக்கம், சமூகச்சீர்திருத்த இயக்கம் காரணமாக எழுச்சி பெற்றது. வங்காளத்தில் ராஜாராம்மொகன்ராய் நிறுவிய பிரம்மசமாஜம், அன்னிபெசன்டின் தியாசபிகல் சொசைட்டி, நீதிபதி மகாதேவரானடேவின் பிரார்த்தனை சமாஜம் ஆகியன விதவை மறுமணத்தை ஆதரித்தன.

விதவைகளின் துன்பத்தைப்போக்க விதவைகள் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்த வேண்டும் என்பது பாரதியின் கருத்து. எனவேதான் பெண்கள் விடுதலைக்கு ஆரம்பப் படிகளாக கூறுவதில் ''புருஷன் இறந்த பிறகு ஸ்திரீ மறுபடியும் விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக்கூடாது'' எனக் கூறுகின்றார். விதவைகளுக்கு மீண்டும் ஒரு திருமணம் செய்து கொள்வதைத் தடுக்கக்கூடாது'' எனக் கூறுகின்றார். விதவைகளுக்கு மீண்டும் ஒரு திருமணம் செய்யும்போது சாதி, மதம், இனம் ஆகியவற்றைப் பார்க்கக்கூடாது என பாரதி வலியுறுத்துகின்றார்.

புாரதி விதவைமணம் செய்வதிலுள்ள தடைகளைப் பற்றிக் கூறுவதுடன் அதனை எதிர்க்கவும் பெண்ணிற்குத் துணிவு வேண்டுமென்றும் கூறுவதுடன் தன் கதைகளில் பெண் மூன்று விதவை மறுமணங்கள் இடம்பெறுகின்றன. மூன்றும் வெவ்வேறு வகையானவை. ஒன்று பிராமண ஜாதிக்குள் நடப்பது. மற்றொன்று இந்துக்களுக்கு வேறுபட்ட ஜாதிக்குள் நடக்கும் கலப்பு மறுமணம், மூன்றாவது இந்து – முஸ்லீம் இருவருக்குமிடையே நடைபெறுவது.[22] விதவை மறுமண ஆதரிப்பை பாரதி தனது ''சந்திரிகையின் கதை'' மூலம் வெளியிட்டுள்ளார். இக்கதையில் விசாலாட்சி என்ற இளம் விதவையை மறுமணம் செய்து கொள்ளும்படி மற்றொரு பெண்ணே (விசாலாட்சியின் அண்ணி) வலியுறுத்துவதாகப் படைத்துள்ளார். பாரதி ''சக்கரவர்த்தினி'' யில் எழுதிய ''ரஜபுத்திரகன்னிகையின் கதை'' மூலம் விதவைத்திருமணம், கலப்புமணம் ஆகியவை அக்பர்காலத்தில் இருந்ததைச் சுட்டிக் காட்டி இளம் விதவைகளை, காதல் மணம்புரிய ஆண்களும் முன்வர வேண்டும் என்றார்.

பாரதி விதவைமறுமணம் பற்றிப் பேசுவதற்கு ஒரு முக்கியமான காரணம் அவர் இளம்வயதில் தன் விதவைச் சிற்றன்னையால் வளர்க்கப்பட்டார். இதனால் தான் ''பெண் விடுதலை'' என்ற கட்டுரையில் பெண் விடுதலை என்பது யாது? என்பது பற்றியும் பேசும் போது பாரதி விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்திற்குத் தகுந்த புருஷரை புனர்விவாகம் செய்து கொள்ள இடம் தர வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

1860 ஆம் ஆண்டு முதல் 1901 ஆம் ஆண்டு வரை இந்தியா முழுவதிலும் 138 மறுமணங்களே பதிவு செய்யப்பட்டன என ''இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை'' என்ற தன் கட்டுரையில் கூறியுள்ளார். அத்துடன் 'நவஜீவனில்' வெளியான கைம்பெண்கள் பற்றிய புள்ளிவிபர அட்டவணையையும் தந்துள்ளார்[23] பாரதி விதவைகள் மறுமணம் பற்றி தேசத்தலைவர்கள் தைரியமுடன் பேசவேண்டம் எனக் குறிப்பிட்டு விதவைகள் மறுமணமே பெண்களின் அநியாயத்திற்கெதிரான தீர்வு என்றார். விதவைத் திருமணத்தை யார் செய்தாலும் பாராட்டினார்.[24] இதனை எதிர்த்து கூறுபவர்கள் பிரபலமான தலைவர்களாக இருந்தாலும், பாரதி அவர்களை எதிர்க்கத் தயங்கவில்லை.[25]

**மணவிலக்கு**

ஐரோப்பியர்கள் மணவிலக்கில் காட்டும் அவசியத்தையும், ஆர்வத்தையும் பாரதி முழுதும் ஏற்கவில்லை. ''விவாகத்தை ரத்து செய்யும் விஷயத்தில் அவசரப்பட வேண்டியதில்லை. பொறுமையை உபயோகப்படுத்தி விவாகக் கூட்டை நிரந்தரமாகப் பாதுகாப்பதே மனித நாகரிகத்தின் சிறப்பாதலால் நாம் அதற்குரிய ஏற்பாடு செய்வோம்'' ஆனால் ''ஆண்களுக்கும் பெண்களுக்கும் எவ்விதத்திலும் வேற்றுமை கிடையாது. இருபாலோரும் சமமாகவே கருதப்படுவார்கள் என்பதில் நாம் ஐரோப்பியரைப் பின்பற்றுவது அவசியம்'' என்று பாரதி கூறுகின்றார்.

**சிறுவயதுத் திருமணம்**

இந்தியாவில் பெண்களின் நிலைமை மோசமாக இருப்பதை மனதில் வைத்தே பெண்விடுதலையின் ஆரம்பப்படிகளுள் முதலாவதாக சிறுபிராயத் திருமணத்தை விலக்க வேண்டமென்றார் பாரதி. இத்துடன் பருவடைந்த பின்பு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் நிகழ்ச்சி எங்கு நடைபெற்றாலும் அதைக்கூர்ந்து கவனித்துப் பாராட்டினார். இத்தகைய சீர்திருத்தத் திருமணங்களைப் பற்றி பாரதி தன்னுடைய 'ருதுமதி விவாஹம்' என்ற கட்டுரையில் புகழ்ந்து எழுதியுள்ளார்.[27] அதே நேரத்தில் பால்ய விவாஹம் என்ற மனமற்ற செய்கையைச் செய்பவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது இவர்கள் இன்னும் ஓராயிரம் ஆண்ணடகள் அடிமைப்பட்டு அழியட்டும் என்ற தீச்சொல்லால் சாடுகிறார்.[28]

'சூரியோதயம்' என்ற பத்திரிக்கையில் ஸ்வாமி விவேகானந்தர் வருஷோத்ஸவம் என்கிற கட்டுரையில் சிறுவயதில் திருமணம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் மாறுதல் (variation of type) ஏற்பட்டு அற்பாயுளில் இறப்பு நேரும் என்பதை உயிர்நூல் ஆராய்சியாளர்கள் கூறுவதை ஆதாரபூர்வமாகவும் விளக்கியுள்ளார். நம் மக்களுக்கு அறிவுரை மூலம் மட்டும் உண்மையைக் கூறாமல் அறிவியல் பூர்வமாக நிரூபித்ததையும் கூறியுள்ளார். இதனால் நாம் குழந்தைத்திருமணத்தை நிறுத்தி நமது ஜாதியைக் காக்க வேண்டும் என்கின்றார்.[29]

பாரதியார் இந்து பெண்களின் முன்னேற்றத்தில் மட்டுமே கவனம் செலுத்தவில்லை என்பதை அவர் மகமதியர்கள் ஒருதார மணத்தை அனுசரித்து பலதார மணத்தைக் கைவிட வேண்டுமென்பதைக் கூறுவதன் மூலம் அறியலாம். முகமதியர்கள் பெண்களை நடத்தும் விதத்திலும், கோஷா விஷத்திலும் காலத்திற்குத் தகுந்தபழ ஆசாரங்களில் மாற்றம் செய்து கொள்ள வேண்டும் என்றும் அதற்கு துருக்கி பெண்கள் விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இஸ்லாமிய பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றார்.[30]

**சதி**

பண்டைய காலத்தில் போரிடும் வீரமரபினருக்கிடையே தோன்றியதே சதியின் அடிப்படையாகும். இந்தியா முழுவதும் அதிகமாக வட இந்தியாவில் இப்பழக்கம் கி.பி.17,18 ஆம் நூற்றாண்ழல் பரவி இருந்தது.

ஒருவன் தன் தந்தையை இழந்து துன்பத்தில் இருக்கும் போது தாயையும் பலவந்தமாக சதியின் மூலம் கொல்வது மிகப்பெரிய பாதகம் எனக் கூறுகின்றார். 'துளசீபாய் என்ற ராஜபுத்திர கன்னிகையின் சரித்திரத்தில்' அக்பரின் படை வீரரான அப்பாஸ்கான் இளம் விதவை துளசீபாயை சதியிலிருந்து காப்பாற்றுவதாகவும், அப்போது சதி பற்றிய அக்பரின் தடையாணையைக் கூறுவதாகவும் அமைத்துள்ளார்.[31] ஆங்கிலேயர்களை பவவாறாக விமர்சித்த பாரதி அவர்கள் நன்மை செய்தபோது அதை தன் எழுத்துக்கள் மூலம் பாராட்டத் தயங்கியதில்லை என்பதற்கு இது ஒரு சான்றாகும்.[32]

**தேவாதாசி முறை**

இந்திய சமூக அமைப்பில் குடும்பம் என்ற அமைப்பு எவ்வளவு வலுவாக இருந்ததோ அந்தளவிற்கு தேவதாசி முறையும் பழக்கத்திலிருந்தது. இது கலையை வளர்ப்பதில் முக்கியப் பங்கு வகித்தாலும் விபச்சாரம் என்பதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. இதனால் பல குடும்பங்கள் அழிந்தன. இந்நிலையில் 19 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஏற்பட்ட பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம் ஆகிய சமூகச் சீர்திருத்த இயக்கங்களும் தேவதாசிமுறையை நீக்க மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின.

தமிழகத்தில் 1892 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ப சென்னை இந்து சமூகச் சீர்திருத்தச்சங்கம் (Madras Hindu Social Reform Association) என்னும் அமைப்பு அதன் உறுப்பினர்களிடம் சதிர்க்கச்சேரியை நடத்தாமலும், அதனை நடத்துபவர்களின் விழாக்களுக்கு போகக்கூடாது விபச்சாரத்தில் ஈடுபடக்கூடாது என உறுதிமொழி வாங்கிக்கொள்வதன் மூலம் தேவதாசி முறையை நீக்க முற்பட்டத. இந்த அமைப்பில் 1904 ஆம் ஆண்டில் சுப்பிரமணிய பாரதியும் அவர் நண்பர்களும் சேர்ந்தனர்.[33] பாரதி தேவதாசிகள் இல்லறமேற்கும் வழியைக்கூறினார், எட்டயபுரத்திலிருந்த வள்ளிக்கண்ணம்மாள் என்ற தேவதாசியைத் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தில் ஈடுபடுமாறு பாரதி கூறினார், அப்பெண்மணியும் இதனை ஏற்று குடும்பம், குழந்தை எனக் கடைசிவரை வாழ்ந்தார்.

பாரதியின் பெண்கள் முன்னேற்ற முயற்சிகளின் அணுகுமுறையைப் பார்க்கும் போது அவருடையது மிதவாத (அ) தாராப் பெண்ணியம் (Liberal Feminism) என்ற அணுகுமுறையைச் சேர்ந்ததாக பெண்ணிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்[34].

புாரதி இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பெண்களின் எழுச்சிக்காக தனக்கு முன்னால் பெண்ணியம் போற்றியவர்களையும் தன் காலத்தில் பெண் முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவர்களையும் தன் படைப்புகளில் ஒரு பாத்திரமாக வைத்து அவர்களைப் பாராட்டி பெருமைப்படுத்தியுள்ளார். பெண் முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்களுடன் தொடர்பும் வைத்திருந்தார்[35]. அவர் காலத்தில் செயல்பட்ட பல பெண் முன்னேற்ற இயக்கங்களையும் குறிப்பிட்டுள்ளார். அதில் பங்கு கொண்டிருந்தார்.

பெண்ணே உலகின் அனைத்து இயக்கத்திற்கும் ஆதாரம் என்றும் பெண்ணை அழப்படுத்தினால் அவள் தன்னை அழித்துக் கொள்வதோடு ஆண்களையும முன்னேற விடாமல் அழித்துவிடுவாள் என்றும் பெண்ணைப் பேண வேண்டும். பாதுகாக்க வேண்டும் என சக்தி கூறுவதாகத் தம்

படைப்புகளில் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றார் என்பது அவருடைய எழுத்துகளின் வரலாறு.[36]

**குறிப்புகளும் மேற்கோள்களும்**

1. ம.பொ. சிவஞானம். “பாரதியார் மீது வங்காளியர் செல்வாக்கு.” மகாகவி பாரதியார் நூற்றாண்டுவிழாமலர், வேங்கடசாமி (தொ.ஆ). (அண்ணாமலைப் பல்கலைக்கழகம். அண்ணாமலைநகர், 1982) ப.95.
2. மேலது.
3. சி. என். குமாரசாமி, பெண்ணியநோக்கில் பாரதி, (சென்னை: தமிழ் புத்தகாலயம், 2001). பக்.59
4. சீனி. விசுவநாதன், காலவரிசைப் படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி – 9, (மாடல் ஹவுஸ் லேன், சென்னை, 2007), பக்.419-22.
5. சீனி. விசுவநாதன், தொகுதி – 9 முன்னர் சுட்டப்பட்டது. பக். 230-35
6. சி.என். குமாரசாமி. முன்னர் சுட்டப்பட்டத. ப.88-90
7. சீனி, விசுவநாதன், காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி – 1, (மாடல் ஹவுஸ் லேன், சென்னை, 1998). பக் 212-17
8. க.கைலாசபதி, பாரதி ஆய்வுகள், (மெட்ராஸ்: NCBH. 1962.) பக்.194-201
9. திருவிளக்கு பூஜையை பெண்கள் முன்னேற்ற கூட்டமாக தன் வீட்டில் நடத்தினார். அதில் பெண்களையே பேச்சாளர்களாக்கி பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பாக்கியவதி என்ற பெண்ணின் பேச்சின் மூலம் பெண்களின் நிலையை சுதந்திரமுடையதாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை குறிப்பிட்டார். யதுகிரி அம்மாளின் பேச்சின் வழியாக தற்கால பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்தி வைத்திருப்பதைக் கூறுகின்றார். அதேபோல் மஞ்சள் குங்கும கூட்டத்தில் பெண்கள் சாமி கும்பிடுவது அவர்களையும் முன்னேற்றும் விதத்தில் இருக்க வேண்டும் என்று சீயுசின் என்ற சீனப்பெண்மணியின் கருத்துகள் மூலம் பெண் விடுதலை கருத்துகளை பெண்களிடையே பரப்பினார்.
10. சி. சுப்பிரமணிய பாரதியார். பாரதியார் கவிதைகள், விடுதலை! விடுதலை! விடுதலை! புடல் எண். 1-3.
11. சீனி, விசுவநாதன், தொகுதி – 9, முன்னர் சுட்டப்பட்டத. பக்.553-61
12. புதுச்சேரியில் ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியின் குமரி ஸ்ரீதங்கம்மா ஒரு பெண்கள் கூட்டத்தில் படித்தது என்ற குறிப்புடன் இக்கட்டுரை 3.5.1918 ஆம் தேதிய சுதேசமித்திரனில் வெளிவந்துள்ளது.
13. சீனி. விசுவநாதன், தொகுதி – 9 முன்னர் சுட்டப்பட்டது. பக்.286-92
14. மேலது. பக். 277-80
15. ரா. நெடுஞ்செழியன்இ “புதுநெறிகாட்டிய புலவர் பாரதியார்”. மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா மலர், ந. வேங்கடசாமி (தொ.ஆ.).ப .100
16. சீனி. விசுவநாதன், காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள். தொகுதி – 8, (மாடல் ஹவுஸ் லேன், சென்னை, 1999.). பக்.755-6.
17. சீனி, விஸ்வநாதன், காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி – 8, (மாடல் ஹவுஸ் லேன், சென்னை, 2004). பக்.680-84
18. மேலது. பக். 540-45.
19. மௌ. சந்திரலேகா, பாரதியும் பெண்விடுதலையும், பாரதி – பன்முகப்பார்வை, க. தணிகாசலம் (தொ.ஆ.). (யாழ்ப்பாணம். 1984), பக்.60-61.
20. சுப்பிரமணிய பாரதியார். முன்னர் சுட்டப்பட்டது. பக்.152-60.
21. சி. என். குமாரசாமி, முன்னர் சுட்டப்பட்டது. பக். 311-12.
22. மேலது. பக்.319-22.
23. மேலது.
24. சீனி. விசுவநாதன். தொகுதி – 9 முன்னர் சுட்டப்பட்டது. பக். 177.
25. விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோரின் விதவை மறுமணம் பற்றி கருத்தை “இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை” என்ற தன் கட்டுரையில் எதிர்த்தார்
26. பாரதி கூறும் இதற்கான தீர்வு ஒரே செய்தி பற்றி ஒரே மனிதனைப் பற்றி எத்தனை நாள் தூற்றுவார்கள்? சலித்துப் போய்விடும் சரியாகிவிடும். ஊலகம் பரந்தது. சாதியினின்றும் விலக்கி

வைத்தால் பெரிய துன்பமொன்றும் நேராது. ஊர்வாயை மூட ஓர் உலைமூடி உண்டு. அதன் பெயர், காலம் பின்னர் முன்போலவே பழகத் தொடங்கிவிடுவார்கள்.

27. சீனி. விசுவநாதன், தொகுதி – 1. முன்னர் சுட்டப்பட்டது. பக்.212-17.
28. சுப்பிரமணிய பாரதியார், பாரதியார் கவிதைகள், கனவு பாடல் எண்.30-38.
29. சீனி. விசுவநாதன். குாலவரிசைப்படுத்தப்பட்டபாரதி படைப்புகள், தொகுதி – 6, (சென்னை: மாடல் ஹவுஸ் லேன், 2005). பக். 522-23
30. சுப்பிரமணிய பாரதியார். முன்னர் சுட்டப்பட்டது. பக் 228-34.
31. சீனி. விசுவநாதன். தொகுதி-9முன்னர் சுட்டப்பட்டது. பக் 531-33
32. அருணன். முன்னர் சுட்டப்பட்டது. பக். 97-98
33. ராஜம்கிருஷ்ணன், இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, பக். 52-63
34. சி.என். குமாரசாமி, முன்னர் சுட்டப்பட்டது, ப. 16.
35. மேலது. பக். 28-30.
36. சீனி. விசுவநாதன். தொகுதி-9, முன்னர் சுட்டப்பட்டது. பக். 286-92.